Reg. No. — 12439

# மேல்நிலை இரண்டாமாண்டு காலாண்டுத் தேர்வு, செப்டம்பர் - 2017

நேரம் : 3-00 மணி] வணிகவியல் [மொத்த மதிப்பெண்கள் : 200

அறிவுரை : 1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்து கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்

2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டும் எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - அ

40×1=40

அனைத்து வினாக்களுக்கு விடையளி.

I சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதவும் :

1. பாதுகாப்பு தொழிற்சாலைகளுக்கு ஏற்ற உகந்த தொழில்முறை அமைப்பு
அ) அரசு நிறுமம் ஆ) பொதுக்கூட்டுரு இ) துறைமுறை அமைப்பு ஈ) வாரிய அமைப்பு
2. தனி நபர் உரிமையாளரின் பயன் என்ன ? அ) சிறுமுதல் ஆ) அவசர முடிவு இ) வரையறு முதல் ஈ) மேலாண்மை திறமைக்கு எல்லை
3. பிறப்பின்மூலம் உறுப்புமை ஏற்படுவது அ) தனி வணிகர்
ஆ) இந்து கூட்டுக் குடும்ப வணிகம் இ) கூட்டுறவு சங்கம் ஈ) கூட்டாண்மை
4. தமிழ்நாடு மின்சார வாரியம் ---- அமைப்பிற்கு எடுத்துக்காட்டு
அ) பொதுக்கூட்டுரு ஆ) அரசு நிறுமம் இ) துறைமுறை அமைப்பு ஈ) வாரிய அமைப்பு
5. பின்வருவனவற்றில் எது அமைப்பின் கோட்பாடு அல்ல?
அ) எளிமை ஆ) திறமை இ) வரையறாப் பொறுப்பு ஈ) நெகிழ்வுத்தன்மை
6. தனியாள் வணிக அமைப்பிற்கு ஏற்ற தொழில்கள்
அ) பேரளவு வியாபாரம் ஆ) நடுத்தர வியாபாரம் இ) சிற்றளவு வியாபாரம்
7. தனியாள் வணிகத்தில் அ) வியாபார இரகசியங்களை காக்க இயலாது
ஆ) வியாபார இரகசியங்களை காக்க இயலும் இ) இரண்டுமில்லை
8. தனியாள் வணிகத்தை பதிவு செய்வது
அ) கட்டாயம் ஆ) விருப்பப் பதிவு இ) பதிவு செய்யவேண்டியதில்லை
9. தனியாள் வணிகரின் பொறுப்பு
அ) முதலுக்கு ஏற்ப வரையறுக்கப்பட்டது ஆ) சொத்துக்கு ஏற்ப வரையறுக்கப்பட்டது
இ) வரையறை இல்லாதது
10. கூட்டாண்மையில் தோன்றும் உறவு முறை
அ) முதல்வர் மற்றும் முகவர் ஆ) உரிமையாளர் மற்றும் வேலையாளர்
இ) எஜமானர் மற்றும் பணியாளர்
11. இந்தியக் கூட்டாண்மைச் சட்டம்
அ) 1932 ஆ) 1956 இ) 1912 ஈ) 1923
12. கூட்டாளி ஒருவர் எச்சட்டத்தின்படி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து கூட்டாண்மையை கலைக்கக் கோரலாம் ? அ) பிரிவு 40 ஆ) பிரிவு 44 இ) பிரிவு 42 ஈ) பிரிவு 43
13. ---- கூட்டாண்மையில் பொதுக்கூட்டாளி மற்றும் வரையறு கூட்டாளி என இரு வகை கூட்டாளிகள் உள்ளனர்
அ) விருப்பமுறி கூட்டாண்மை ஆ) குறிப்பிட்ட கூட்டாண்மை இ) வரையறுத்த கூட்டாண்மை
14. கூட்டாண்மை உண்டாக்கப்படுவது
அ) ஒப்பந்தத்தால் ஆ) கூட்டாளிகளிடையே உறவு இ) அரசின் வழிகாட்டல்
15. நிறுமச் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை A (Table A) என்பது
அ) நிகழ்ச்சி குறிப்பேட்டின் மாதிரி ஆ) இருப்புநிலைக் குறிப்பின் மாதிரி
இ) நிறுமச் செயல்முறை விதிகளின் மாதிரி ஈ) நிறும அமைப்பு முறையேட்டின் மாதிரி
16. ஒரு நிறுமத்தின் கடனீட்டு பத்திரதாரர்கள் என்பார்
அ) கடனாளர் ஆ) உறுப்பினர்கள் இ) கடன் வாடிக்கையர் ஈ) நிறுமத்தில் கடன்
17. ஒரு பொது வரையறு நிறுமம் ஒன்றின் அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை
அ) 50 ஆ) 25 இ) வரையறையில்லை ஈ) மேற்கூறிய ஏதுமில்லை
18. ஒரு இயக்குநர் ----- இயங்குவார் அ) நிறுமத்தின் முகவராக
ஆ) நிறுமத்தின் பொறுப்பாண்மையராக இ) நிறுமத்தின் முதன்மை அதிகாரியாக
ஈ) மேற்சொன்ன அனைத்துமாக செயலாற்றுகிறார்
19. தகுதி பெற்ற நிறுமச் செயலரை நியமித்தல் கீழ்கண்டவற்றில் எந்நிறுமத்திற்கு கட்டாயமாக்கப்பட்டுள்ளது ? அ) ரூ. 500000க்கு கூடுதலாக இருக்கும் நிறுமம்
ஆ) ரூ. 5000000க்கு கூடுதலாக இருக்கும் நிறுமம் இ) ரூ. 2500000க்கு கூடுதலாக இருக்கும் நிறுமம் ஈ) ரூ. 1500000க்கு கூடுதலாக இருக்கும் நிறுமம்
20. நிறுமத்தின் நிர்வாகத்தில் மிகு அதிகாரங்களை பெற்றிருக்கும் நபர்
அ) மேலாண்மை இயக்குநர் ஆ) பொது மேலாளர் இ) மேலாளர் ஈ) நிறுமச் செயலாளர்

II கோடிட்ட இடங்களை நிரப்புக :

21. வேலைப் பகிர்வு முறை என்பது -------.

(திருப்புக

22. தொலைதூர ஒலிபரப்பு ----- அமைப்பின்கீழ் வருகிறது.
23. தொழில் அமைப்புகளில் மிகவும் பழமையானது ------.
24. இந்திய ரிசர்வ் வங்கி, இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் ஆகியவை -----க்கு எடுத்துக்காட்டாகும்.
25. தனியாள் வணிகரே வியாபாரத்தின் -----.
26. தனியாள் வணிகரின் பொறுப்பு ------.
27. வங்கி தொழிலல்லாத பிற தொழில்களுக்கு இருக்க வேண்டிய அதிகபட்ச உறுப்பினர் எண்ணிக்கை----.
28. ---- வயதை பூர்த்தி செய்யாத நபரை இளவர் என்கிறோம்.
29. ---- என்பது தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்ட கூட்டாண்மையாகும்.
30. கூட்டாண்மை நிறுவனத்தில் முதலீடு செய்து, மேலாண்மையில் பங்கேற்கும் கூட்டாளியை ----- என்று அழைக்கிறோம்.
31. அவசர காலங்களில் நிறுவனத்தின் நன்மைக்காக பயன்படுத்தும் உரிமைகளுக்கு ----- என்று பெயர்
32. பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத்தில் இயற்றப்பட்ட தனிச்சட்டத்தின் மூலம் உருவாக்கப்படும் தொழிலமைப்பு -----
33. ஒரு நிறுமத்தின் அக மேலாண்மை குறித்த விவரங்கள் அடங்கி இருப்பது ----
34. நிலுவையிலுள்ள பங்காதாயம் பெற உரிமையுள்ள முன்னுரிமை பங்குகள் ---- என அழைக்கப்படுகின்றன.
35. ஒரு பொது வரையறு நிறுமம் தனது பங்குகள் மற்றும் கடனீட்டுப் பத்திரங்களை வாங்குமாறு பொதுமக்களிடம் அழைப்புவிடும் விளம்பரத்திற்கு பெயர் ----.
36. ஒரு கடனை ஒப்புக்கொள்ளும் அல்லது கடனை ஏற்படுத்தும் ஆவணம் ----.
37. சட்டமுறை அறிக்கையை நிறும உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் கூட்டம் நடைபெறும் நாளுக்கு ---- நாட்கள் முன்னராவது அனுப்பி வைக்க வேண்டும்.
38. நிறுமச் செயலர் ---- நியமிக்கப் பெறுகிறார்.
39. கூட்டாளிகள் இலாப நட்டங்களை ---- பிரித்துக் கொள்கின்றனர்.
40. அரசு நிறுமத்தின் ஊழியர்கள் ---- அல்லர்.

## பகுதி-ஆ  $10 \times 4=40$

குறிப்பு : 1. ஏதேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்
2. ஒவ்வொரு வினாவிற்கும் நான்கு வரிகட்கு மிகாமல் விடையளிக்கவும்.

41. அமைப்பை வரையறு.
42. தரவரிசைக் கோட்பாடு என்றால் என்ன ?
43. பன்னாட்டு நிறுமங்களுக்கு நான்கு எடுத்துக்காட்டுகள் தருக.
44. உழையாக் கூட்டாளி என்பவர் யார் ?
45. 'கூட்டாண்மை' - வரையறு.
46. கூட்டாண்மைக் கலைப்பிற்கும் நிறுவனக் கலைப்பிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
47. 'தனியாள் வணிகர்' - வரையறு.
48. கூட்டுருவாக்கம் செய்யப்படாத தொழிலமைப்புகள் எவை ?
49. ஒப்புறுதி நிறுமம் என்றால் என்ன ?
50. எக்காரணங்களுக்காக நிறுமப் பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்படலாம் ?
51. குவிவு முன்னுரிமைப் பங்குகள் என்றால் என்ன ?
52. அரசு நிறுமம் என்பது யாது ?
53. மாற்று இயக்குநர் என்பவர் யார் ?
54. 'மேலாண்மை ஊதிய விகிதம்' - சிறுகுறிப்பு வரைக.
55. வரையறு : 'தனி வரையறு நிறுமம்'

## பகுதி-இ  $5 \times 8=40$

குறிப்பு : 1. ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்
2. ஒவ்வொன்றிற்கும் ஒருபக்க அளவிற்கு மிகாமல் விடையளி

56. ஏதேனும் இரண்டு தனிநபர் நிறுவனங்களை விளக்கி எழுதுக.
57. தனியாள் வணிகத்தின் நன்மைகள் ஏதேனும் எட்டு எழுதுக.
58. கூட்டாண்மை நிறுவனத்தை பதிவு செய்யாமையின் குறைபாடுகள் யாவை ?
59. பங்குகளை வட்டத்தில் (தள்ளுபடியில்) வெளியிட உள்ள நிபந்தனைகள் யாவை?
60. செயல்முறை விதிகளில் உள்ள பொருளடக்கங்கள் யாவை ?
61. ஒரு பொது வரையறு நிறுமத்தில் இயக்குநர்கள் எவ்வாறு நியமிக்கப்படுகின்றனர்?
62. கூட்டாளிகளின் ஏதேனும் நான்கு வகைகளை விவரி.
63. குறிப்பு வரைக : அ) ஒருங்கிணைத்தல்  ஆ) கட்டளையொருமை

## பகுதி-ஈ  $4 \times 20=80$

குறிப்பு : 1. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்
2. ஒவ்வொன்றிற்கும் இரு பக்க அளவிற்கு மிகாமல் விடையளி

64. பல்வேறு தொழிலமைப்புகளை விளக்கி எழுதுக. (அல்லது)
தனி வரையறு நிறுமத்திற்கும், பொது வரையறு நிறுமத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
65. தனி நபர் வணிகத்தின் குணாதிசயங்கள் யாவை ? (அல்லது)
இயக்குநருக்குரிய அதிகாரங்கள் யாவை? அவற்றின்மீது என்ன கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன ?
66. கூட்டாண்மைக்கும் தனியாள் வணித்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? (அல்லது)
நிறுமச் செயலரின் பணிகள், கடமைகள் யாவை ?
67. கூட்டாளிகளின் உரிமைகள், கடமைகளை விவரி. (அல்லது)
பங்குகளுக்கும், கடனீட்டுப் பத்திரங்களுக்கும் உள்ள வேறுபாடுகளை விளக்குக.